# திறன்மிகு செயல்பாட்டில் நிலத்தடி குளிர்விப்பான் மையம்

உலகிலேயே ஆகப் பெரியதாகக் கருதப்படும் நிலத்தடி வட்டார குளிர்விப்பான் கட்டமைப்பு மரினா பேயில் அமைக்கப்பட்டுள்ளது.

‘சிங்கப்பூர் பவர்’ நிறுவனத்தின் துணை நிறுவனமான ‘சிங்கப்பூர் டிஸ்ட்ரிக்ட் கூலிங்’ நிறுவனம் அந்தக் குளிர்விப்பானின் மேம்பாட்டுக்குப் பிறகு நேற்று நிலையத்தின் செயல்பாட்டைத் தொடங்கியது.

மரினா பே வட்டாரத்தில் இருக்கும் கட்டடங்களில் உள்ள குளிர்சாதன வசதிகளுக்கும் பொதுப் பயன்பாட்டுக்கும் தேவையான குளிர்ந்த நீரைத் தயாரிக்கும் மைய நிலையமாக அது செயல்படும்.

இந்த மைய நிலையத்தின் திறன்மிகு செயல்பாட்டால் 40 விழுக்காட்டுக்கும் அதிகமான மின்னாற்றலை வாடிக்கையாளார்கள் சேமிக்க முடியும் என ‘சிங்கப்பூர் டிஸ்ட்ரிக்ட் கூலிங்’ நிறுவனம் குறிப்பிட்டது.

இந்த மின்னாற்றல் 24,000 மூவறை வீவக வீடுகளில் பயன்படுத்தக்கூடிய அளவிலானதாகும்.

மரினா பே நிதி வட்டாரத்தில் இருக்கும் வாடிக்கையாளர்களுக்குப் பயன்படும் விதத்தில் இந்த நிலையத்தில் 5 கி.மீ. தூரத்துக்கான குழாய் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நிலத்தடியில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால் நிலப் பரப்பில் இட ஒதுக்கீடு, நிறுவனங்களில் குளிர்விப்பான் சாதனங்கள், குளிர்விப்பான் கோபுரம் போன்றவை தவிர்க்கப்பட்டுள்ளன.

ஒன் ராஃபிள்ஸ் கீயின் கீழ்த் தளத்தில் ஒரு நிலையமும் மெரினா பே சேண்ட்ஸின் கீழ்த் தளத்தில் ஒரு நிலையமும் அமைக்கப்பட்டு அவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

ஒரு துணை நிலையம் ஒன் மரினா பொலிவார்டில் அமைக்கப்பட்டுள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Limited. Permission required for reproduction.